4. “கல்வியின் பெருமை” பாடப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள திருக்குறள்களையும், அவற்றின் பொருள்களையும் எழுதுக.
5. உழவின் சிறப்பு பற்றி எழுதுக.
6. காவிரியின் பெருமை பற்றி இப்பாடல் கூறுவனவற்றை எழுதுக.
7. கொல்லிமலையின் அமைவிடம், அங்குள்ள முக்கிய இடங்கள், விளையும் பொருட்கள் போன்றவற்றைப் பட்டியலிடுக.
8. பின்வரும் குறட்பாக்களை அடி பிறழாமல் எழுதுக.
   அ. “ஒழுக்கத்தி னெய்துவர்” எனத் தொடங்கும் குறள்.
   ஆ. “வண்ணம் செயல்” என முடியும் குறள்.

**X. பின்வரும் வினாக்களில் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விடையளி.** 1 x 10 = 10

1. “பொங்கல் திருநாள்” என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை எழுதுக.
2. தற்கிழமை, பிறிதின் கிழமைகளை எடுத்து எழுதுக.

எனது மாடு, உனது வீடு, முருகனது கை, அவனது புத்தகம், யானையது கால், பூனையது வால், வேலனது பை, குமரனது கால், புலியது கண், வளவனது கருமை

| தற்கிழமை | பிறிதின் கிழமை |
|---|---|
| | |

# பருவத் தேர்வு - 1

## மகிழ்ச்சி - ஏழாம் வகுப்பு

மதிப்பெண்கள் : 100 காலம் : 3 மணி

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 5 x 1 = 5

1. குறுந்தொகையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை _____.
   அ. 205 ஆ. 80 இ. 380 ஈ. 400
2. நெடுந்தொகை என்றழைக்கப்படும் நூல் _____________.
   அ. புறநானூறு ஆ. குறுந்தொகை
   இ. பதிற்றுப்பத்து ஈ. அகநானூறு
3. “கேண்மை” எனும் சொல்லின் பொருள் _____________.
   அ. வேர் ஆ. நட்பு இ. ஒலி ஈ. நோய்
4. நாலடியாரில் ___________ பிரிவுகள் உள்ளன.
   அ. 3 ஆ. 5 இ. 2 ஈ. 7
5. ஏற்காடு அமைந்துள்ள மலைப்பகுதி ___________.
   அ. சேர்வராயன் மலை ஆ. கொல்லிமலை
   இ. ஜவ்வாது மலை ஈ. பச்சைமலை

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக.** 5 x 1 = 5

1. பாரதிதாசனின் இயற்பெயர் _______________.
2. உயிரைவிடச் சிறந்ததாகப் போற்றப்படுவது _____________.
3. ________ ஆரம்பக்கால கல்வி முறையாக அறியப்படுகிறது.
4. “பொறுத்தல்” என்பதன் பொருள் _____________ .
5. ____ ஏழைகளின் மலைப்பிரதேசம் என அழைக்கப்படுகிறது.

**III. பொருள் எழுதுக.** 5 x 1 = 5

1. புவி – _______________
2. பிணி – _______________

3. ஆக்கம் – ____________

4. மாலை – ____________

5. புள் – ____________

**IV. பிரித்து எழுதுக.** 5 x 1 = 5

1. நனியுண்டு – ____________
2. நல்லறிவு – ____________
3. தீயொழுக்கம் – ____________
4. உழுதுண்டு – ____________
5. மனக்கவலை – ____________

**V. சேர்த்து எழுதுக.** 5 x 1 = 5

1. கரம் + ஒலி = ____________
2. பெருமை + தன்மை = ____________
3. நான்கு + அடி + ஆர் = ____________
4. மரம் + கால் = ____________
5. நீதி + மன்றம் = ____________

**VI. பொருத்துக.** 5 x 1 = 5

| | |
|---|---|
| 1. முல்லை | புதுவை |
| 2. உழவர்கள் | ஆகாய கங்கை நீர்வீழ்ச்சி |
| 3. மரூஉ | சோழன் நல்லுருத்திரன் |
| 4. கொல்லிமலை | எதிர்மறை தொழிற்பெயர் |
| 5. மறவாமை | அச்சாணி |

**VII. எதிர்ச்சொல் எழுதுக.** 5 x 1 = 5

1. இன்பம் x ____________
2. தோல்வி x ____________
3. குறைவு x ____________
4. மாலை x ____________
5. வெண்மை x ____________

**VIII. சிறுவினாக்களுக்கு விடையளி. (ஏதேனும் பத்திற்கு மட்டும்)** 10 x 2 = 20

1. தமிழ்மொழி எத்தகையது?
2. எட்டுத்தொகையில் இடம்பெற்றுள்ள நூல்களின் பெயர்களை எழுதுக.
3. குற்றியலுகரத்தின் வரையறைகள் யாது?
4. எதற்கு கரைகள் கிடையாது? ஏன்?
5. ஒருவனுக்கு மேன்மையைத் தருவது எது?
6. மக்களுக்கு கண் போன்றது எது? ஏன்?
7. நான்காம் வேற்றுமை எவ்வித பொருள்களில் வருமென்பதை பட்டியலிடுக.
8. எது நல்லது என வள்ளுவர் கூறுகிறார்?
9. ஐவகை நிலங்கள் யாவை?
10. வழக்கு என்றால் என்ன?
11. வாணிதாசன் இயற்றிய நூல்களின் பெயர்களை குறிப்பிடுக.
12. பச்சைமலை எத்தனை பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது? அவை யாவை?
13. தொழிற்பெயர் எவற்றைக் காட்டாது?
14. எறும்புகள் எவ்வாறு புற்றைக் கட்டும்?
15. எளிது, கடினம் என வள்ளுவர் எதைக் கூறுகிறார்?

**IX. பெருவினாக்களுக்கு விடையளி. (ஏதேனும் ஐந்திற்கு மட்டும்)** 5 x 7 = 35

1. "தாய்மொழி" பாடலின் பொருளை சுருக்கமாக எழுதுக.
2. கலித்தொகை பாடல்கள் மற்றும் திணை அமைப்பு முறையினைப் பற்றி எழுதுக.
3. "கல்லாரே யாயினும்" எனத் தொடங்கும் நாலடியார் பாடலை எழுதுக.